தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 24

2011 செப்டம்பர் 10, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."

கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்துத் தானும் உண்டு, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுதல் நீதி நூல்கள் கூறுகின்ற அறங்கள் அனைத்திலும் மிக உயர்ந்ததாகும்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

1. தகவல் கோரல்

இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. ஆர். நல்லக்கண்ணு அவர்களது பயணத்தின்போது காரை தனியார் வங்கியினர் வழிமறித்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 55-ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) இதனை முதலில் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. எம். ஆறுமுகம், என்ன சொல்ல வருகிறீர்கள்?*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர், மரியாதைக்குரிய தோழர் நல்லக்கண்ணு அவர்கள், காரிலே சென்றபோது, காருக்காக கடன் வாங்கி அதைத் திருப்பிச்*

[திரு. எம். ஆறுமுகம்] [2011 செப்டம்பர் 10

செலுத்தாத காரணத்தினாலே, ரௌடிகள், வங்கி ஒன்றைச் சேர்ந்தவர்கள் அந்தக் காரை வழிமறித்து, அவரைக் கீழே இறக்கிவிட்டு, ரௌடிகளையும், அடியாட்களையும் வைத்து துன்புறுத்தியிருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய (குறுக்கீடு) எச்.டி.எப்.சி. வங்கியினர் இவ்வாறு நடந்து கொண்டிக்கின்றனர். (குறுக்கீடு) எங்களுடைய தலைவர் அவமானப் படுத்தப்பட்டிருக்கின்ற இத்தகைய செயல்கள், நடவடிக்கைகள், நடைபெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதுசம்பந்தமான ஒரு தீர்மானம் கொடுத்துள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்று காலையில்தான் என்னுடைய அறைக்கு வந்து ஒன்பதரை மணியளவில் அறிவிப்புக் கொடுத்தீர்கள். அது என்னுடைய ஆய்விலே உள்ளது. அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடதுசாரிக் கட்சிகளினுடைய, உழைப்பாளி வர்க்கத்தினுடைய தலைவர் தோழர் திரு. ஆர். நல்லக்கண்ணு அவர்கள், விடுதலைப்போராட்ட வீரரும்கூட. அரசியலில் நேர்மையை, எளிமையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு தலைவர். அவருக்கே இந்த நிலைமை என்றால், இது எங்களுக்கெல்லாம் மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையை எடுத்து உடனடியாக விவாதிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள், இதுகுறித்து காலையிலே அவையின் கவனத்தினை ஈர்ப்பதற்காக அறிவிப்பு கொடுத்துள்ளார். அது ஆய்வில் உள்ளது. செல்வி பாலபாரதிக்கும் இதே பதில்தான்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மூத்த பெரும் அரசியல் தலைவர் திரு. நல்லக்கண்ணு அவர்கள், மதிப்பிற்கும், மரியாதைக்கும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?*

2011 செப்டம்பர் 10]

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்த மாமன்றத்தில் விவசாயிகள் வாங்கியிருக்கக்கூடிய கடன்களைக் கட்டவில்லை என்பதற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கியினர் ஜப்தி செய்கின்றார்கள், அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஜப்தியை நாங்கள் ஆதரிக்கவில்லை, மத்திய அரசு அப்படி ஜப்தி செய்யும் என்றால் தலையிடுவோம், அதைத் தடுத்து நிறுத்துவோம் என்று சொன்னார்கள். அதனுடைய வளர்ச்சிப்போக்கில், இன்றைக்கு ஒரு தேசிய தலைவராக இருக்கின்ற, இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவரே இப்படி பழிவாங்கப்படுகிறார். அவர் பயணம் செய்த கார் பறிமுதல் செய்யப்படுகிறது, அவரை அவமானப்படுத்துகிறார்கள் என்று சொன்னால், உடனடியாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இப்படிப்பட்ட மனிதநேயமற்ற காரியங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு அரசு தலையிட வேண்டும், அதுபற்றி இந்த அவையில் ஆழமாக விவாதிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள், முதலிலே கோவை மாவட்டத்திலே டிராக்டர்கள் பல இடங்களில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளால் பறிமுதல் செய்யப்படுகின்றன என்ற கருத்தைச் சொன்னார்கள். உடனடியாக, கோவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிவுரை வழங்கியதன் அடிப்படையில், டிராக்டர்கள் அனைத்தும் அவர்களுக்குத் திருப்பி வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று அவருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் அனைத்து மேலாளர்களையும் அழைத்துப் பேசி உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே அது குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை விவாதத்தின்போதே நாங்களும் கமர்ஷியல் வங்கிகள் டிராக்டர் போன்றவற்றை அடியாட்களை வைத்து பறிமுதல் செய்வது, விவசாயிகளுக்கே தெரியாமல்,...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.*

திரு. சு. குணசேகரன்: *இல்லை, இல்லை சொல்லிவிடுகிறேன். விவசாயிகளுக்கு தெரியாமலே அதனை விற்பனை செய்வது என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே, விவசாயிகள் நிலத்தை அடமானம் வைத்துத்தான் அந்த டிராக்டர்களை எல்லாம் வாங்கியிருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினோம். சமீபத்திலே மறவமங்கலம் கிளை வங்கியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய உள் துறை அமைச்சர் இருந்தார். அங்குகூட நான் அதைச் சொல்லியிருக்கிறேன்.*

முற்பகல் 10-05

இவை மத்திய அரசு வங்கிகள், அதனால் நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியவில்லையென்று இங்கே அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் சொன்னார்கள். இருந்தாலும், நமது காவல் துறை அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரை வைத்து வங்கிகளுடைய கூட்டத்தைக் கூட்டி அறிவுறுத்த வேண்டும். வங்கிகள் வசூலுக்குத் தனியாரை நியமனம் செய்வதன்மூலமாக தாதாக்கள், அடியாட்கள் உருவாக்கப்படுகிறார்கள், அவர்களை வைத்துத்தான் இந்த நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே, இந்த தாதாக்களை உருவாக்குவதற்கான நடவடிக்கை உள்ளதால், தமிழ்நாட்டிலே பல இடங்களில் சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, காவல் துறை அதிகாரிகளின் மூலமாக, வங்கி அதிகாரிகளைக் கூப்பிட்டு, அமரவைத்துப் பேசி இந்த நடவடிக்கைகளைத் தடை செய்யவேண்டும்.

2011 செப்டம்பர் 10] [திரு. க. குணசேகரன்]

ஏற்கெனவே, இப்படி வசூல் செய்யக்கூடாது என்பதற்கு உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் வங்கியான ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கிக்கு ஏற்கெனவே பலமுறை உச்ச நீதிமன்றம் அபராதமெல்லாம் விதித்திருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில், சட்டம்-ஒழுங்கை மீறி, வங்கி நடவடிக்கைகளையெல்லாம் மீறி, கமர்ஷியல் வங்கிகள் இன்றைக்குத் தனியார்களை கமிஷன் அடிப்படையில் நியமனம் செய்து, எல்லா இடங்களிலும் இவ்வாறு தடுத்து நிறுத்துகின்றார்கள். அந்த அடிப்படையில்தான் நேற்று எங்கள் மாபெரும் தலைவர் திரு. நல்லக்கண்ணு அவர்கள் சென்ற நேரத்தில், அவரைப் பார்த்தும்கூட எந்தவிதமான தயக்கமும் காட்டாமல் நடுரோட்டில் கீழே இறக்கிவிட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்த வழியாகச் சென்ற ஒரு காவல் துறை அதிகாரி பார்த்து, தகவல் கொடுத்து, அதற்கு பின்னால் அவரை ஒரு பஸ்ஸில் ஏற்றி அனுப்பியிருக்கிறார்கள். நாடறிந்த ஒரு தலைவருக்கே இந்த நிலைமை என்று சொன்னால் சாதாரண மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் எந்தப் பாதுகாப்பும் இருக்காது என்பதைத் தெரிவித்து, அரசு உடனடியாக... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) இதுகுறித்து எவ்வளவு நேரம் பேசுவீர்கள்? இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே மற்ற உறுப்பினர்கள் சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். அதே பிரச்சினை குறித்துத்தான் திரும்பவும் பேசுகிறீர்கள். இந்தப் பிரச்சினையில் மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசுவதுபோல விரிவாகப் பேசினால், உங்களுக்கு நான் எப்படி நேரம் கொடுக்க முடியும்? Please sit down. (குறுக்கீடு) விரைவாகப் பேசி முடியுங்கள்.

திரு. க. குணசேகரன்: எனவே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அல்லது மாண்புமிகு அமைச்சர்கள் தலையிட்டு, இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, வங்கிகளின் இத்தகைய போக்குகளைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் இன்று சபையில் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்களும் மற்றவர்களும் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கொடுத்திருக்கின்ற கவன ஈர்ப்பு அறிவிப்புகளும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரின் ஆய்வில் இருக்கின்றன. துறை சார்ந்த பதில் தற்சமயம் அரசிடம் இல்லை. உரிய முறையில் அந்த பதிலைப் பெற்று, யார் தவறு செய்திருந்தாலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2. கவன ஈர்ப்பு

தனியார் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் அரசு நிர்ணயித்ததைவிடக் கூடுதல் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. பெ. மகாலிங்கம் ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் அரசு